www.freetnbooks.com

**KK10SS**

கன்னியாகுமரி மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2025

-----

## வகுப்பு 10

காலம்: 3.00 மணி **சமூக அறிவியல்** மதிப்பெண்கள்: 100

### பகுதி - I

குறிப்பு: **i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **14×1=14**

**ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1) ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம் எனக் கூறியவர் யார்?
அ) லெனின் ஆ) மார்க்ஸ் இ) சன்-யாட்-சென் ஈ) மாசேதுங்

2) அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கு வீசியது?
அ) கவாசாகி ஆ) டோக்கியோ இ) ஹிரோசிமா ஈ) நாகசாகி

3) **சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்:**
i) இராஜாராம் மோகன்ராய் ஒரு கடவுள் கோட்பாட்டை போதித்தார்.
ii) அவர் உருவ வழிபாட்டை ஆதரித்தார்.
iii) சமூகத் தீமைகளைக் கண்டனம் செய்வதை எதிர்த்து அவர் சிற்றேடுகளை வெளியிட்டார்.
அ) i) சரி ஆ) i) மற்றும் ii) சரி
இ) i), ii) மற்றும் iii) சரி ஈ) i) மற்றும் iii) சரி

4) கீழ்காண்போரில் தீவிர தேசியவாதி யார்?
அ) தாதாபாய் நௌரோஜி ஆ) நீதிபதி கோவிந்த ரானடே
இ) பிபின் சந்திரபால் ஈ) ரொமேஷ் சந்திரா

5) சென்னை மகாஜன சபையின் முதல் தலைவர் யார்?
அ) T.M. நாயர் ஆ) P. ரங்கையா இ) G. சுப்பிரமணியம் ஈ) G.A. நடேசன்

6) பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு
அ) நர்மதா ஆ) கோதாவரி இ) கோசி ஈ) தாமோதர்

7) சேஷாசலம் உயிர்க்கோள பெட்டகம் அமைந்துள்ள மாநிலம் ............
அ) தமிழ்நாடு ஆ) ஆந்திரப்பிரதேசம் இ) மத்தியப்பிரதேசம் ஈ) கர்நாடகா

8) உலகிலேயே மிக நீளமான அணை ............
அ) மேட்டூர் அணை ஆ) கோசி அணை
இ) ஹிராகுட் அணை ஈ) பக்ரா நங்கல் அணை

9) தேசிய சணல் வாரியத்தின் தலைமையகம் ............ல் அமைந்துள்ளது.
அ) நியூடெல்லி ஆ) கொல்கத்தா இ) செராம்பூர் ஈ) நேபா நகர்

10) தமிழ்நாட்டு மக்களின் இரண்டாவது முக்கிய உணவுப்பயிர்
அ) பருப்பு வகைகள் ஆ) சிறுதானியங்கள்
இ) எண்ணெய் வித்துக்கள் ஈ) நெல்

11) நடுவண் அரசின் அரசியலமைப்புத் தலைவர் ............ ஆவார்.
அ) குடியசுரத்தலைவர் ஆ) தலைமை நீதிபதி
இ) பிரதம அமைச்சர் ஈ) அமைச்சர்கள் குழு

12) இந்திய வெளியுறவுக் கொள்கையை ஏற்றுக்கொண்டு வழிநடத்தும் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு எது?
அ) சட்டப்பிரிவு 50 ஆ) சட்டப்பிரிவு 51
இ) சட்டப்பிரிவு 52 ஈ) சட்டப்பிரிவு 53

13) முதன்மைத்துறை இதனை உள்ளடக்கியது.
அ) வேளாண்மை ஆ) தானியங்கிகள் இ) வர்த்தகம் ஈ) வங்கி

14) ஆசியாவின் டெட்ராய்ட் என அழைக்கப்படுவது ............
அ) தூத்துக்குடி ஆ) கோயம்புத்தூர் இ) சென்னை ஈ) மதுரை

### பகுதி - II

குறிப்பு: **எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **10×2=20**

***வினா எண் 28-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.***

15) மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

16) டாலர் ஏகாதிபத்தியம் - வரையறு.

17) திருச்சிராப்பள்ளி பேரறிக்கையின் முக்கியக் கூறுகளைத் தருக.

18) சைமன் குழு ஏன் புறக்கணிக்கப்பட்டது?

19) தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தால் வெளியிடப்பட்ட செய்தித்தாள்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com



20) இந்தியாவில் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறு.
21) மண் - வரையறு.
22) நிலக்கரியின் வகைகளை அதன் கரிம அளவுகளுடன் குறிப்பிடுக.
23) தேரி - என்றால் என்ன?
24) தமிழ்நாட்டின் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களைப் பட்டியலிடுக.
25) செம்மொழி தகுதி பெற்ற இந்திய மொழிகள் யாவை?
26) பிரிக்ஸ் (BRICS) உறுப்பு நாடுகளின் பெயரைக் குறிப்பிடுக.
27) வரி - வரையறுக்க.
28) சிறப்பு பொருளாதார மண்டலங்கள் சில கூறுக.

## பகுதி - III

**குறிப்பு: எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 42-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **10×5=50**

29) **கோடிட்ட இடங்களை நிரப்புக:**
i) ............ என்பவர் புரட்சிக்காரர்களால் வேலூர் கோட்டையின் புதிய சுல்தானாக அறிவிக்கப்பட்டார்.
ii) ............ம் ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.
iii) ............ தமிழ்நாட்டின் மாநில விலங்கு ஆகும்.
iv) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் ............ ஆகும்.
v) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி ............ம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது.

30) வேலூரில் 1806-ல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.
31) முதல் உலகப் போருக்கான முக்கிய காரணங்களை விவாதி.
32) அ) **வேறுபடுத்துக:**
i) வானிலை மற்றும் காலநிலை
ii) மேற்குத்தொடர்ச்சி மலை மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலை
ஆ) **காரணம் கூறுக:** மலைப்பகுதிகள் சமவெளிகளைவிட குளிர்ரானவை.
33) சட்டமறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பங்கினை விவரி.
34) இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவத்தையும் பற்றி விவரி.
35) இந்தியக் காடுகள் பற்றி விவரிக்கவும்.
36) காவிரி ஆறு குறித்து தொகுத்து எழுதுக.
37) முதலமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?
38) அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக.
39) உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.
40) வெற்றிகரமான தொழில்துறை தொகுப்புகளின் முக்கியப் பண்புகள் யாவை?
41) **காலக்கோடு வரைக:** 1910 முதல் 1930 வரை
**(இந்திய தேசிய இயக்கத்தின் முக்கிய நிகழ்வுகள்)**
42) **இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்:**
1. டெல்லி 2. கான்பூர் 3. ஜான்சி 4. வேலூர் 5. சௌரிசௌரா

## பகுதி - IV

**குறிப்பு: பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.** **2×8=16**

43) அ) கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக. **(அல்லது)**
ஆ) பெண்களின் மேம்பாட்டிற்கு 19-ம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

44) **அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிக்கவும்:**
i) ஆரவல்லி மலை ii) கஞ்சன் ஜங்கா
iii) ஏதேனும் ஒரு உயிர்க்கோள பெட்டகம் iv) நர்மதை ஆறு
v) வண்டல் மண் பகுதி vi) ஹிராகுட் அணை
vii) தேயிலை விளையும் பகுதி viii) கண்ட்லா துறைமுகம்

**(அல்லது)**

**ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிக்கவும்:**
i) பழவேற்காடு ஏரி ii) நீலகிரி
iii) வைகை ஆறு iv) சோழமண்டல கடற்கரை
v) வேடந்தாங்கல் vi) நெல் விளையும் பகுதி
vii) மேட்டூர் அணை viii) தமிழ்நாட்டின் மான்செஸ்டர்

-----------

www.freetnbooks.com | FREETNBOOKS